செய்தி வெளியீடு எண்:203 நாள்: 12.04.2017

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு காவல் துறையில் சாலை வாகன விபத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் இணையதளம் வழியாக அளிக்கும் வசதி

சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 05.01.2017–ம் தேதி அன்று விரிவான விபத்து அறிக்கை (DAR) அனைத்து சாலை விபத்து வழக்குகளிலும், சாலை வாகன விபத்து இழப்பீடு உரிமை கோரிக்கை தீர்ப்பாயத்தில் (MACT) அளிக்கப்பட வேண்டும் என்றும், அவைகளை காப்பீடு நிறுவனங்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் காவல்துறை வழங்கிட வேண்டும் என்று உத்திரவு இடப்பட்டது.

அதன் அடிப்படையில், மாநில குற்ற ஆவண காப்பகம் (https://tnpolice.gov.in) என்ற காவல் இணையதளத்தில் வழியாக ஆவணங்களை பதிவிறக்கம் செய்யும் வசதியை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த இணைய வசதியானது 29.03.2017–ம் தேதி முதல் அனைத்து மாவட்ட வாகன விபத்து இழப்பீடு உரிமை தீர்பாயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், உயர்நீதிமன்றத்தின் அறிவுரையின் பேரில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு பயிற்சி முகாம் அளிக்கப்பட்டு வருகிறது. 09.04.2017–ம் தேதி அன்று சென்னை மற்றும் புதுச்சேரி நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அலுவலர்களுக்கு சென்னையில் உள்ள சட்ட பயிற்சி மையத்தில் அளிக்கப்பட்டது.

தமிழக அரசு காப்பீடு நிறுவனங்களுக்கு ஆவணங்களை இணையம் மூலமாக பகிர்ந்து கொள்ள ஒப்புதல் அளித்து 11.04.2017ம் தேதி அன்று ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் காப்பீடு நிறுவனங்கள் ஒரு ஆவணத்திற்கு ரூ.100/– செலுத்தி ஆவணங்களை பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். இது அனைத்து மாவட்ட காவல் நிலையங்களிலும் அமுல் செய்யப்பட்டு 01.03.2017–ம் தேதி முதல் பதிவு செய்யப்பட்டுள்ள சாலை விபத்து வழக்குகள் தொடர்பான ஆவணங்களை பதிவிறக்கம் செய்து வருகிறார்கள். இதன் மூலம் 01.03.2017க்கு பிறகு பதிவு மற்றும் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் கீழ்கண்ட ஆவணங்களை காவல் இணையத்தளம் மூலம் பதிவிறக்கம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

1) எப்.ஐ.ஆர்.
2) ஆர்.சி

3) ஓட்டுநர் உரிமம்
4) காப்பீடு சான்றிதழ்
5) வாகனத்தின் தகுதி சான்றிதழ்
6) மாதிரி வரைபடம்
7) பார்வை மகசர்
8) மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை
9) பிரேத பரிசோதனை அறிக்கை
10) விபத்து பதிவு நகல்
11) காயச் சான்றிதழ்
12) இறுதி அறிக்கை மற்றும்
13) விரிவான விபத்து அறிக்கை தொடர்பான ஆவணங்கள்

இந்த இணையதள வசதியின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு தொகையை எளிதாக பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சாலை விபத்து வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இந்த வசதியினை 30.06.2017க்கு முன்பு பெற்றுக் கொள்ள இணையதளத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**